www.tamilarangam.net

# புலிகளுக்கு எம்.ஜி.ஆர்-கொடுத்த பணம்

### உளவுத்துறை தகவல்

புலிகள் அமைப்பு கட்டுப்பாடான ஒரு அமைப்பு. பிரபாகரன் தனிப்பட்ட ரீதியில் தனக்கென்று சில ஒழுங்கு முறைகளை வகுத்துச் செயற்படுபவர். அவரது உறுப்பினர்கள் கட்டுப்பாட்டை மீறினால் கடுமையாக நடந்து கொள்பவர். இவை போன்ற விபரங்களை மாநில உளவுத்துறை மூலம் எம்.ஜி.ஆர். பெற்றிருந்தார்.

கலைஞர் கருணாநிதி ரெலோ அமைப்பை கிட்டத்தட்ட தத்தெடுத்தது போலவே தனக்கு ஆதரவாக வைத் திருந்தார்.

'ரெலோ' அமைப்பு கட்டுப்பாடு விடயத்தில் ஓட்டைகள் நிறைந்தது. ஒவ்வொரு உறுப்பினரும் ஒரு விதமாக செயற்படுவார்கள், என்றெல்லாம் தமிழக உளவுத்துறை எம்.ஜி.ஆரிடம் சொல்லி வைத்திருந்தது.

இந்த இடத்தில் ஈழப்போராளி அமைப்புக்கள் விடயத்தில் இந்திய-தமிழக உளவுத்துறைகளது நடவடிக்கை பற்றி சுருக்கமாக கூறவேண்டியிருக்கிறது.

ஈழப்போராளிகள் அமைப்புக்கள் குறித்து இந்தியாவில் நான்கு உளவுத் துறை அமைப்புக்கள் கண்காணித்து வந்தன.

1.இந்திய ஆய்வு- பகுப்பாய்வுப் பிரிவான 'றோ'(RAW)

2. இந்திய.மத்திய புலனாய்வு பிரிவு. (சி.பி.ஐ)

3. இந்திய இராணுவத்தின் உளவுப் பிரிவு.

4.தமிழக பொலிஸ் உளவுத்துறையின் விஷேச பிரிவான 'கியூ' பிரிவு.

இதில் 'றோ' மட்டுமே மத்திய அரசின்

அது ஏன்? ஆயுதம் அதிகம் பெற வேண்டுமானால் உறுப்பினர் தொகையை உயர்த்தித்தானே காட்ட வேண்டும்!

### மோகன்தாஸ்.

தமிழ்நாடு பொலிஸ் உளவுத்துறை டி.ஐ.ஜி.யாக இருந்தவர் கே.மோகன்தாஸ். இவர்தான் பின்னர் தமிழக பொலிஸ் டி.ஜி.பியாகவும் இருந்தவர்.

மோகன்தாசுக்கும் இலங்கை உளவுத் துறைக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதாக ஈழப் போராளி அமைப்புக்களுக்கு சந்தேகம் இருந்தது.

அதனால் தமிழக உளவுத்துறைக்கு சரியான விபரங்கள் கிடைக்கக்கூடாது என்று விழிப்பாக இருந்தனர்.

ஆனால், மோகன்தாஸ் எம்.ஜி.ஆருக்கு வலதுகரம் போல இருந்தார். எம்.ஜி.ஆர். அவர் சொன்ன தகவல்களை பெரிதும் நம்பினார்.

### புலிகளுக்கு புகழாரம்

ஈழப் போராளி அமைப்புக்கள் குறித்து மோகன்தாஸ் எம்.ஜி. ஆருக்கு என்ன சொல்லி யிருப்பார் என்பதை அறியவேண்டுமா?

பதவியில் இருந்து ஓய்வு பெற்ற பின்னர் மோகன்தாஸ் ஒரு புத்தகம் எழுதியிருந்தார். 'எம்.ஜி.ஆர் நிழலும், நிஜமும்.' என்பது அதன் பெயர். (இப்புத்தகம் பற்றி முன்னரும் ஒரு முறை குறிப்பிட்டிருக்கிறேன்.)

அப்புத்தகத்தில் ஈழப்போராளி அமைப் புக்கள் பற்றி மோகன்தாஸ் கூறியிருப்பது இதுதான்:

"மத்திய அரசு அமைப்புக்கள் செய்த முதல் தவறு, பயிற்சிக்கான கையாட்களாக அவை 'டெலோ' பிரிவினரைத் தேர்ந் தெடுத்ததே. அந்தப் பிரிவில் குற்றவாளிகளும் கொலைகாரர்களும் இருந்தனர். விடுதலைப் புலிகள், ஈ.பி.ஆர்.எல்.எஃப், ப்ளாட்

கலைஞர் கருணாநிதிக்கு மட்டும்தான் ஈழப் போராளி அமைப்புக்களிடம் செல்வாக்கு இருக்கிறது என்ற எண்ணத்தைத் தவறாக்குவதும் எம்.ஜி.ஆரின் திட்டமாக இருந்தது.

இந்த விடயத்திலும் எம்.ஜி.ஆரிடம் கலைஞர் கருணாநிதி தோற்றுத்தான் போனார். எம்.ஜி.ஆரின் மறைவின் பின்னர் ரெலோவைக் கைவிட்டு புலிகளை முற்று முழுதாக ஆதரித்தார் கலைஞர்.

எம்.ஜி.ஆர். பதவியில் இருந்தபோது ரெலோ உறுப்பினர்கள் பலரைக் கடுமையான சட்டங்களின் கீழ் சிறையில் தள்ளியிருந்தார். கலைஞர் பதவிக்கு வந்த பின்னரும் அவர்களில் சிலர் சிறையில்தான் இருந்தனர்.

### சமூக விரோதிகள் ஒழிப்பு

1984 இல் வடக்கில் சமூக விரோதிகள்

சங்கிலியன் பஞ்சாயத்து என்ற பெயரில் தண்டனை வழங்கியது புளொட் இயக்கம்.

யாழ்ப்பாண இராச்சியத்தை கடைசியாக ஆண்ட மன்னனின் பெயர்தான் சங்கிலியன்.

கிளிநொச்சியில் கந்தசாமி சிறீஸ்கந்த ராசா (வயது 33) என்பவரும் சமூகவிரோதி என்று குற்றம் சாட்டப்பட்டு 'புளொட்' அமைப்பால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

### மின் கம்பத்தில்

அச்சுவேலி பஸ் நிலையத்துக்குச் சென்றவர்களுக்கு ஒரு அதிர்ச்சி காத்திருந்தது. அங்கிருந்த மின் கம்பத்தில் ஒரு உடல் கட்டப்பட்டிருந்தது.

முகத்தில் சூட்டுக்காயம். கழுத்தில் வெட்டுக் காயம். கொலையானவர் இளைஞராகத் தெரிந்தார்.

மின் கம்பத்தின் அருகே ஒரு துண்டுப்



அப்போது யாழ்ப்பாணம் சிறைச் சாலையில் இருந்த தமிழ் கைதிகளுக்கும் பயம். தாமும் கொல்லப்படலாம் என்று நினைத்தார்கள். 'குக்கூ' வும் ஏதோ திருட்டுக் குற்றத்துக்காக யாழ்ப்பாணச் சிறையில் இருந்தான்.

அநியாயமாக சாவான் ஏன் என்று சிறையிலிருந்து தப்பி ஓடி வந்து விட்டான்.

வெளியே வந்தவன் ஆங்காங்கே கைவரிசை காட்டினான். நவாலியில் ஒரு வீட்டில் புகுந்து அங்கிருந்த இளம் பெண்ணைத் தாக்கினான். ஒரு லட்சம் ரூபாய் பெறுமதியான நகைகளோடு கம்பி நீட்டினான்.

ஒரு நாள் 'குக்கூ' வை வழிமறித்தனர் சில இளைஞர்கள். 'குக்கூ' முதலில் முறைத்துப் பார்த்தான். பின்னர் என்ன நினைத்தானோ ஓடத் தொடங்கினான்.

இளைஞர்களில் ஒருவர் சுட்டார். 'குக்கூ' விழுந்தான். மல்லாகத்தில் ஒரு மின்கம்பத்தில் 'குக்கூ'வின் உடலைக் கட்டிவிட்டுப் போய்விட்டார்கள்.

"பல தடவை எச்சரித்தோம், கேட்கவில்லை, அதனால் சுட்டுவிட்டோம்" என்று சுன்னாகம், மல்லாகப் பகுதிகளில் சுவரொட்டிகள் காணப்பட்டன.

**அரசியல் தொடர்**

**அற்புதன்-எழுதுவது**

**40**

# மின் கம்பத்தில் தொங்கிய சடலங்கள்

# 84 இல் ஒரு சங்கிலியன் பஞ்சாயத்து

## அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

முடிவுகளுக்கேற்ப போராளி அமைப்புக் களோடு நேரடித் தொடர்பு கொண்டிருந்தது.

பயிற்சி, ஆயுதம், நிதி மூன்றும் 'றோ' மூலமாகவே இயக்கங்களுக்கு வழங்கப்பட்டமையால் இந்திய அரசின் பிரதிநிதி போலவே இயக்கங்களோடு 'றோ' நடந்து கொண்டது.

ஏனைய உளவுப் பிரிவுகள் போராளி களோடு நட்பு ரீதியில் பழகி தமக்குத் தேவையான விபரங்களைப் பெற்றுக் கொள்வதோடு நின்று கொண்டன.

எங்கெங்கே இயக்க முகாம்கள் இருக் கின்றன; எத்தனை பேர் இருக்கிறார்கள் போன்ற விபரங்களை சேகரிப்பதோடு அவை இருந்துவிட்டன.

'றோ' வோடு தொடர்பு இருந்தமையாலும் தமிழக மக்களது பேராதரவு இருந்தமையாலும் ஏனைய உளவுப் பிரிவுகளை போராளி அமைப்புக்கள் பொருட்டாகக் கொள்ளவில்லை.

அவர்கள் கேட்ட விபரங்களைக் கூட சரியாக கொடுப்பதுமில்லை.

உதாரணமாக, ஒரு முகாமில் நூறு பேர் இருந்தால் 50 பேர் என்று முகாம் பொறுப்பாளர் சொல்லுவார்.

'றோ' பிரிவு கேட்டால் மட்டும் முகாமில் நூறு பேர் இருந்தாலும் இருநூறு பேர் இருக்கிறார்கள் என்று பொறுப்பாளர் சொல்லிவிடுவார்.

(புளொட்) அமைப்புக்களுக்கு இருந்த தீவிர இலட்சியப் பிடிப்பு 'டெலோ' வுக்கு இல்லை. ஆனால், அவர்கள் மத்திய அரசைப் பொறுத்தவரை 'ஆமாம் சாமிகள்.' இந்தப் பாரபட்சம் மற்றப் போராளிகள் பிரிவுகளை வருத்தப்படுத்தியது.

எல்.ரி.ரி.ஈ.க்கு உயர்ந்த இலட்சிய ஈடுபாடு இருந்தது. கவர்ச்சிகரமான அதன் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் தலைமையில் போராளிகள் கட்டுப்பாட்டுடன் இயங்கினார்கள்.

அவ்வப்போது நான் எம்.ஜி.ஆரிடம் போராளிகள் பற்றிச் சொல்லிவந்தேன். போராளிகளது தலைவர்களை, குறிப்பாகப் புலிகளைச் சந்திக்க விரும்புவதாக ஒரு முறை அவர் என்னிடம் தெரிவித்தார்.

எம்.ஜி.ஆருக்கும், புலிகளது தலைவர் பிரபாகரனுக்கும் ஒரு பிணைப்பு ஏற்பட்டு விட்டது. தனக்கே உரித்தான உள்ளுணர்வு மூலம் எம்.ஜி.ஆர். புலிகளுக்கும் பிற அமைப் புக்களுக்கும் உள்ள வேறுபாடுகளைப் புரிந்து கொண்டார். அதன் விளைவாக எம்.ஜி.ஆர். பிற்காலத்தில் அந்த இயக்கத்திற்கு தனது சொந்தப் பணத்தில் இருந்தும், அரசு நிதியிலிருந்தும் வெவ்வேறு சமயங்களில் உதவி செய்தார்."

இவ்வாறு கூறியிருக்கிறார் மோகன்தாஸ். தனது உளவுத்துறை மூலம் பெற்ற விபரங்களை வைத்து புலிகளை அணைத்துக் கொண்டார் எம்.ஜி.ஆர்.

ஒழிப்பு தீவிரமாக நடந்தது.

பொலிஸ் நிலையங்கள் பல மூடப் பட்டமையால் சமூக விரோதிகளுக்கு கொண்டாட்டமாகிவிட்டது.

வீடுகளில் புகுந்து கொள்ளை, பெண்களை பலாத்காரம் செய்தல், வீதிகளில் சங்கிலிப் பறிப்பு என்று சமூக விரோதிகளது அட்டகாசம் அதிகமாகியது.

சுழிபுரத்தைச் சேர்ந்தவர் சின்னையா சிவபாலன். 21 வயது. சுழிபுரம், பண்டத் தரிப்பு பகுதியில் பிரபலமான உள்ளூர் சண்டியர்.

5.03.84 அன்று சின்னையா சிவபாலன் பண்டத்தரிப்புச் சந்தியில் சூட்டுக் காயங்களோடு செத்துக் கிடந்தார்.

பிணத்தின் அருகே ஒரு துண்டுப் பிரசுரம் காணப்பட்டது.

வீடுகளில் நகைக் கொள்ளைகளில் ஈடுபட்டது; சண்டிலிப்பாய் இளம் பெண் ஒருவரை சுழிபுரத்தில் வைத்து பலாத்காரம் செய்தமை; இயக்கத்தின் பெயரில் வாகனக் கடத்தல்களில் ஈடுபட்டமை போன்ற குற்றச் சாட்டுகள் பிரசுரத்தில் தெரிவிக்கப் பட்டிருந்தன.

பிரசுரத்தின் அடியில் தீர்ப்பு வழங்கியது யார் என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

தீர்ப்பு வழங்கியது: 'சங்கிலியன் பஞ்சாயத்து' என்று மட்டுமே குறிப்பிடப் பட்டிருந்தது.

பிரசுரம் காணப்பட்டது.

துப்பாக்கி முனையில் பொதுமக்களின் உடமைகளைக் கொள்ளையடித்தான். அதுக் காகவே தண்டனை என்று பிரசுரத்தில் கூறப்பட்டிருந்தது.

பிரசுரத்தில் புலிகள் தமது சின்னத்தையும் பொறித்திருந்தனர்.

கொல்லப்பட்டவரின் பெயர் பொன்னம்பலம் நடராஜா. வயது 28.

இத் தண்டனையை அடுத்து மின் கம்பத் தண்டனைகள் பரபரப்பாகப் பேசப்பட்டன.

திருடர்கள், கொள்ளையர்கள் பற்றி மக்கள் தமக்குள் பேசிக்கொள்ளும் போது, இவ்வாறு கூறுவார்கள்:

"போஸ்ரிலை (மின்கம்பத்தில்) தொங்கப்போறான்."

### குக்கூ

யாழ்ப்பாணம் கல்வியங்காட்டைச் சேர்ந்தவர் குணரத்தினம். 29 வயது. இவரும் ஒரு சண்டியர். சுருக்கமாக 'குக்கூ' என்று அழைக்கப்படுவார்.

'குக்கூ' வுக்கு மூன்று பெண்டாட்டி. அதுவும் போதாது என்று அங்கே இங்கே கைநீட்டி அட்டகாசம் வேறு.

என்றாலும் 'குக்கூ' கெட்டிக்காரன். 83 ஜூலைக் கலவரத்தின் போது வெலிக் கடைச் சிறையில் தமிழ் அரசியல் கைதிகள் கொல்லப்பட்டார்கள் அல்லவா?

புலிகள் தான் குக்கூவைச் சுட்டனர். குக்கூ சிறையில் இருந்திருந்தால் செத் திருக்க மாட்டான்.

### ஜப்பானுக்கு குறி

இதேபோல மற்றொரு சம்பவம். முல்லைத்தீவைச் சேர்ந்தவர் மகேந்திரன். இவரை மகேந்திரன் என்று சொன்னால் தெரியாது. ஜப்பான் என்று சொன்னால் தான் தெரியும்.

தனியார் வீடுகளுக்குள் புகுந்து கைவரிசை காட்டுவதில் ஜப்பான் படு சூரன். அடி, பிடி விவகாரங்களிலும் கெட்டிக்காரன்.

ஜப்பானை தேடிவந்தனர் மூன்று இளைஞர்கள். ஜப்பானுக்கு விஷயம் விளங்கிவிட்டது. வந்தவர்களையும் ஓரளவு அவனுக்குத் தெரியும்.

ஓடித்தப்ப வழி பார்த்தான். சூடு விழுந்தது. தலையில் ஒரு சூடு; மார்பில் ஒரு சூடு; ஜப்பான் செத்துப் போனான்.

இதற்கு அன்டன் படைப்பிரிவு உரிமை கோரியது. இது புளெட் அமைப் பின் ஒரு பிரிவாகும்.

பிரபலமான மற்றொரு சண்டியருக்கு புலிகள் குறிவைத்தனர்.

குறிவைக்கப்பட்டவரும் லேசுப்பட்டவரல்ல.

(தொடர்ந்து வரும்)



## எட்டிக்குப் போட்டி

28.6.95 அதிகாலை மண்டைதீவு இராணுவ முகாமை புலிகள் தாக்கி அங்கிருந்த ஆயுதங்களை கைப்பற்றினார்கள்.

முகாம் தாக்குதல் காட்சியே ( 1. 2. 3. ) மேலுள்ள படங்களில் காணப்படுகிறது.

கைப்பற்றப்பட்ட ஆயுதங்களை புலிகளது தலைவர் பிரபா கரன், கடற்புலித் தளபதி சூசை, புலிகளது மூத்த தளபதி சொர்ணம், யாழ் தளபதி பானு ஆகியோர் (3.4.5.) பார்வையிடுகின்றனர்.

□□

28.07.95இல் வெலிஓயா தாக்குதல் புலிகளிடம் கைப் பற்றிய ஆயுதங்களை புலி களது பாணியிலேயே பார்வைக்கு வைக்க இராணுவத்தினருக்கு ஒரு வாய்ப்பு. (படம் 6) இராணுவ வெற்றிகளை பறைசாற்றுவதில் இரு தரப்பும் எட்டிக்குப் போட்டியாக செயற்படுகின்றன. ஆயுத பலத்திற்கே முதல் மரியாதை.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்